**செய்தி வெளியீடு எண்:67** **நாள்: 27.01.2013**

செய்தி வெளியீடு

நீதி நிருவாகம் செம்மையாக நடைபெறுவதற்காக மாநிலம் முழுவதும் பல்வேறு நிலை கொண்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நீதிமன்றங்களின் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு உரிய நீதியினை பெற்று வருகின்றனர். இத்தகைய நீதிமன்றங்கள் சிறப்பாக செயல்பட, அதற்கு உரிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில் சமீபத்தில் திண்டிவனத்தில் அனைத்து நீதிமன்றங்கள், நீதிபதிகளின் குடியிருப்புகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் 17 கோடியே 31 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் தற்பொழுது செயல்பட்டு வரும் நீதிமன்றக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அங்கு அன்றாடம் வருகை தரும் பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர். இதனை கருத்தில் கொண்டு நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் 8 கோடியே 31 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டவும் மற்றும் 2 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் தற்பொழுது செயல்பட்டு வரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகிய இரண்டும் தற்சமயம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தக் கட்டடங்கள், இந்த நீதிமன்றங்கள் தங்கள் பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஏற்றவகையில் அமையப் பெறவில்லை. எனவே இதனைக் கருத்தில் கொண்டு, கடலூர் மாவட்டம் திட்டக்குடியில், 4 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கும், 71.50 லட்சம் ரூபாய் செலவில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

ராமநாதபுரம் மாவட்டம், முதுக்குளத்தூரில் தற்பொழுது செயல்பட்டு வரும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகிய இரண்டும் தற்சமயம் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்கள், இந்நீதிமன்றங்களின் பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஏற்றவகையில் அமையப் பெறவில்லை. எனவே இதனைக் கருத்தில் கொண்டு ராமநாதபுரம் மாவட்டம், முதுக்குளத்தூரில், 4 கோடியே 33 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கும், 64.13 லட்சம் ரூபாய் செலவில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் பணிபுரியும் கூடுதல் மாவட்ட நீதிபதிக்கு 64.90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்பு கட்டுவதற்கும், கூடுதல் சிறப்பு நீதிபதிக்கு 40.37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்பு கட்டுவதற்கும், குற்றவியல் நடுவர் நீதிபதி-2க்கு 36.41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்பு கட்டுவதற்கும் என மொத்தம் கிருஷ்ணகிரியில் பணிபுரியும் நீதிபதிகளுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக 1 கோடியே 41 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

புதிய நீதிமன்ற வளாகங்கள் கட்டுதல், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல் போன்ற நீதித்துறை பணிகளுக்காக மொத்தத்தில் 21 கோடியே 64 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள், ஜனநாயகத்தின் தூணாக விளங்கும் நீதித்துறையின் பணிகளுக்கு மிகுந்த உதவிகரமாக விளங்கும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 27.1.2013